1973 ஆகஸ்ட் 13] [திரு. ஜே. ஜேம்ஸ்]

செலக்ட் கமிட்டி அரசாங்கத்திற்கு அறிக்கையைச் சமர்ப்பித்து விட்டதோ உடனடியாக அது இந்த மன்றத்தில் வைக்கப்பட வேண்டும், அதுகுறித்து விவாதிக்கப்பட வேண்டுமென்று விதி இருக்கிறது. தனியார் பள்ளி பாதுகாப்பு மசோதா மீது ஜாயின்ட் செலக்ட் கமிட்டி அரசாங்கத்திற்கு ரிப்போர்ட் கொடுத்திருக்கிறது. அந்த பில் இதுவரை இந்த மன்றத்தில் வைக்கப்படவில்லை. அதற்கான காரண காரியங்கள் யாவை என்பதைக் கல்வியமைச்சர் அவர்களிடத்தில் இருந்து அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இந்த அவையில் நடக்கின்ற நடைமுறையைப் பற்றித்தான் ஒழுங்குப் பிரச்சினை யாக எழுப்ப முடியும். உறுப்பினர் அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு என்னால் பதில் அளிக்க முடியும் என்றாலும் அது முறை அல்லாத காரணத்தால் நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல் அவர்கள் இரண்டு முறைகளிலே அதாவது குறுகிய காலக் கேள்வி மூலமோ அல்லது 41-வது விதியின் மூலமோதான் விவரங்களைக் கோர முடியும். இது பாயின்ட் ஆப் ஆர்டரின் கீழ் வராது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செலக்ட் கமிட்டியிலிருந்து அறிக்கை வரவில்லை. அந்தக் கமிட்டி அறிக்கையை இந்த நேரத்திற்குள் கொடுத்துவிட வேண்டுமென்று சொல்ல முடியாது. அந்த அறிக்கை கொடுத்த பிறகுதான் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள முடியும். திரு. ஜேம்ஸ் அவர்கள் எழுப்பியது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல.

(இ) அவை உரிமைக் குழு, நாத்திகம் நாளிதழ்குறித்து கொடுத்த அறிக்கையின்மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காதது குறித்து

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: ஆன் ஏ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். கடந்த ஓராண்டுக்கு முன்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌடி சுந்தரபாரதி அவர்கள் 'நாத்திகம்' நாளிதழ் மீது உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்து இந்தச் சட்டமன்றத்தின் மூலம் உரிமைக் குழுவுக்கு அனுப்பப்பட்டது. உரிமைக் குழுவும்

அறிக்கையைச் சமர்ப்பித்து அவைக்கு அனுப்பிவிட்டது. அது குறித்து எந்தவிதமான நடவடிக்கையும் இந்த இரண்டு, மூன்று கூட்டத் தொடரில் எடுக்கப்படவில்லை. இது சட்டவிதிகளுக்கு மாறானது அல்லவா?

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, on a point of order. As per rule 83 (6) of the Assembly Rules, a point of order is not a point of privilege. Also, according to the same rule 83, a Member shall not raise a point of order to ask for information. So, the point of order raised by the Hon. Member to ask for more information, is not permissible under the rules. x

THIRU V. M. ABDUL JABBAR: I am not asking for information. My point is that the matter has not been taken up in the last two sessions ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த அவையில் அறிக்கை வந்து விட்டால் அந்த அறிக்கையின்மீது விவாதம் நடத்த வேண்டுமென்று எந்த உறுப்பினரும் தீர்மானம் கொடுக்கலாம். எந்த உறுப்பினரும் அந்த அறிக்கையின் மீது விவாதம் நடத்த வேண்டுமென்ற தீர்மானத்தை கொண்டு வந்து அவை ஏற்றுக் கொண்டால் அதை எடுத்துக் கொள்ளலாம்.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, this matter has to be decided in the Privileges Committee.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரிவிலேஜ் கமிட்டி அறிக்கையை அவை முன் வைத்திருக்கிறது. அதிலே விவாதம் நடத்த வேண்டுமென்று பிரிவிலேஜ் கமிட்டி டைரக்ஷன் கொடுக்க முடியாது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: பிரிவிலேஜ் கமிட்டி குறிப்பிட்ட ஆசிரியருக்கு என்ன விதமான தண்டனை வழங்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கமிட்டியின் அறிக்கைப்படி அது இந்த அவைக்கு வந்து அவை ஏற்றுக் கொண்ட பிறகுதான் மற்ற நிகழ்ச்சிகள் எல்லாம்.

1973 ஆகஸ்ட் 13]

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : அதிலே என்ன தாமதம்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் யார் வேண்டுமென்றாலும் தீர்மானம் கொடுக்கலாம்.

(7) தீர்மானம்.

உறுப்பினர் திரு. மு. சி. ஆ. இரத்தினசாமித் தேவர் வருகையின்மைக்கு அனுமதி அளித்தல்குறித்து.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதிகளில் 15-வது விதியின்கீழ் திரு. மு. சி. ஆ. இரத்தின சாமித் தேவர், எம்.எல்.ஏ. அவர்கள் வருகையின்மைக்கு 1—4—1973-ல் இருந்து ஆறு மாத காலத்திற்கு பேரவை அனுமதி அளிக்குமாறு கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

(6) நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி

(அ) கவன ஈர்ப்பு, ஒத்திவைப்புத் தீர்மானங்களைப் பலர் கொடுத்திருந்தும், ஒரு சிலருக்கே அவற்றைக் கொண்டுவர அனுமதி அளிக்கப்படுவது குறித்து—(தொடர்ச்சி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் நெசவாளர் பிரச்சினை பற்றிக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். பல்வேறு பொருள் பற்றி உறுப்பினர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். சில, சில காரணங்களால் தள்ளப் பட்டிருக்கின்றன. ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் இருக்கிறது. அது இந்தப் பொருள் பற்றியது அல்ல. நெசவாளர் பிரச்சினைபற்றி எந்தவிதமான கவன ஈர்ப்புத் தீர்மானத்தையும் திருமதி அனந்த நாயகி அம்மையார் அவர்கள் கொடுக்கவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.